# சென்னை–05, விலிங்டன் சீமாட்டி கல்வியியல் மேம்பாட்டு நிறுவன முதல்வரின் செயல்முறைகள்

**முன்னிலை :** முனைவர் (திருமதி) ம.ச.தில்லைநாயகி எம்.ஏ., எம்.பில்., எம்.எட்., பி.எச்.டி.,
முதல்வர்

**ந.க.எண் 347/அ/2020 நாள் 22.09.2021**

**பொருள் :** தமிழ்நாடு கல்லூரிக் கல்வித்துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி – சென்னை– 5, விலிங்டன் சீமாட்டி கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம் (தன்னாட்சி) – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி– IV 2018–19, 2019–20 –இல் இளநிலை உதவியாளர் தெரிவு – திரு. சா. செய்யது அலி யாசர் அராபத் பணியமர்த்தப்பட்டமை – பணி வரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக

**பார்வை :** 1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலர் கடித எண் 2361/PSD-1/A/2020 நாள் 29.05.2020
2. கல்லூரிக்கல்வி இயக்குநரின் கடித ந.க. எண் 16252/பி1/2020 நாள் 27.08.2020
3. இந்நிறுவன முதல்வரின் செயல்முறைகள் ந.க. எண் 347/அ/2020 நாள் 03.09.2020
4. கல்லூரிக் கல்வி இயக்குநர் கடித ந.க. எண் 16252/பி1/2020 நாள் 07.09.2021

*****

பார்வை 1–இல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடிதத்தில் 2018–19, 2019–20 –ஆம் ஆண்டுகளுக்கான தொகுதி –IV தேர்வில், தெரிவு செய்யப்பட்டு இளநிலை உதவியாளராக பணிபுரிய ஆணை ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆதனைத் தொடர்ந்து பார்வை 2–இல் காணும் இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளராக பணிபுரிய திரு. சா. செய்யது அலி யாசர் அராபத் என்பாருக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து பார்வை 3–இல் காணும் இந்நிறுவன முதல்வரின் கடிதத்தினை முன்னிறுத்தி 18.09.2020 அன்று முற்பகல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தார். பார்வை 4–இல் காணும் இயக்குநரின் கடிதத்தின்படி வரிசை எண் 46–இல் உள்ளபடி பணிவரன் முறை செய்யப்படுவது தொடர்பாக கீழ்க்கண்ட நிபந்தனைகளை தெரிவித்து திரு. சா. செய்யது அலி யாசர் அராபத், இளநிலை உதவியாளர் என்பாருக்கு பணிவரன் முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

**<u>நிபந்தனை</u>**

இப்பணி வரன்முறை தொகுதி–IV 2018–19 மற்றும் 2019–2020 பணிநியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் நிலுவையில் உள்ள வழக்குகளில் வழங்கப்பட உள்ள இறுதி தீர்ப்பாணைக்குட்பட்டது.

முதல்வர் 23/9/21.
விலிங்டன் சீமாட்டி கல்வியியல்
மேம்பாட்டு நிறுவனம், செ–5

பெறுநர்:– திரு. சா. செய்யது அலி யாசர் அராபத், இள்நிலை உதவியாளர்,
விலிங்டன் சீமாட்டி கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம் (த), சென்னை–05.

23/9/2021.

நகல்:– 1. கல்லூரிக் கல்வி இயக்குநர்,
கல்லூரிக் கல்வி இயக்ககம், சென்னை–06.
2. சம்பளக் கணக்கு அலுவலகம் (கி), பட்டியல் பிரிவு, சென்னை–08.
3. “அ” பிரிவு